தேசிய
ஊக்கமருந்து தடுப்பு
கழகம்

निष्पक्ष खेल
Play fair



விளையாட்டு வீரர்கள் ஊக்கமருந்து பயன்பாடு தடுப்பு செயல்முறை

நாடாவால் சாற்றளிக்கப்பட்ட
மெய்நிகர் மற்றும் உள்ளடக்கிய
செயல்முறை..

முன்னுரை

ஊக்கமருந்து தடுப்பு (பரிசோதனை) என்பது ஊக்கமருந்து தடுப்பு அமைப்புகளால் (ADOs) விளையாட்டுகளில் சீரான தன்மை மற்றும் நியாயமான விளையாட்டை உறுதி செய்ய பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்.

எந்த ஒரு ஊக்கமருந்து தடுப்பு திட்டத்தின் முக்கிய அம்சம், மாதிரி சேகரிப்பு ஆகும். இது விளையாட்டு வீரரின் ரத்தம், சிறுநீர், உலர்ந்த ரத்தப் புள்ளிகள் அல்லது வாடாவால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் மாதிரியை சேகரிப்பதை உள்ளடக்கியது. அதைத் தொடர்ந்து முறையான ஆவணப்படுத்தல், மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் வாடா அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்திற்கு அனுப்புதல் ஆகியவை செய்யப்படும்.

விளையாட்டுகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் மற்றும் ஊக்கமருந்து தடுப்பு விதிகளுக்கு உட்பட்டவர்களின் சிறுநீர் மற்றும்/அல்லது ரத்தத்தை அவர்களின் சர்வதேச கூட்டமைப்பு (IF), தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பு (NADO) அல்லது முக்கிய நிகழ்வு அமைப்பாளர் (MEO), எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் பரிசோதிக்கலாம். இந்த நோக்கத்திற்காக அனைத்து பரிசோதனைகளும் சிறப்பு பயிற்சி பெற்ற ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பணியாளர்களால் (DCP) நடத்தப்படுகின்றன.

போட்டியின் போது, போட்டிக்கு வெளியே அதாவது விளையாட்டு வீரரின் இல்லம், பணியிடம் அல்லது பயிற்சி தளம் போன்ற இடங்களில் பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

பரிசோதனைக்கு விளையாட்டு வீரர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

•போட்டியின் போது இறுதி நிலை அல்லது சில சிறப்பு காரணங்களுக்காக தேவைப்பட்டால் விளையாட்டு வீரர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தேர்வு செய்யப்படலாம்.

•போட்டிக்கு வெளியே: விளையாட்டு வீரர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் மற்றும் முன் அறிவிப்பு இல்லாமல் ஊக்கமருந்து சோதனை செய்யப்படலாம்.

ஒரு விளையாட்டு வீரர் மைனர் அல்லது மார்றுத்திறனாளியாக இருந்தால், தேவையான மற்றும் சாத்தியமான இடங்களில் மாதிரி சேகரிப்பு நடைமுறை மாற்றியமைக்கப்படலாம்.



பரிசோதனை (சிறுநீர்)

பரிசோதனை செயல்முறையின் 11 படிகள் பின்வருமாறு:

படி 1

விளையாட்டு வீரர் தேர்வு

விளையாட்டு வீரர்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் ஊக்கமருந்து சோதனைக்கு தேர்ந்தெடுக்கப்படலாம்.

படி 2

அறிவிக்கை

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரி (DCO) அல்லது பாதுகாவலர் விளையாட்டு வீரரிடம், ஊக்கமருந்து கட்டுப்பாட்டு செயல்முறைக்கு (பரிசோதனை)அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். மேலும் அவர் எந்த ஏடிஒ அதிகார அமைப்பின் கீழ் பரிசோதிக்கப்படுகிறார் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

படி 3

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சென்று சேருதல்

விளையாட்டு வீரர் உடனடியாக ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு செல்ல வேண்டும் (இருப்பினும், டிசிஒ/பிசிஒ மற்றும் பாதுகாவலர் முன்னரே தெரிவித்தால், அவருக்கு பதக்க விழா போன்றவற்றுக்காக விலக்கு அளிக்கப்படலாம்).

படி 4

மாதிரி சேகரிப்பு டப்பாவின் தேர்வு

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பணியாளர்கள் வழங்கியவற்றில் இருந்து சிறுநீர் மாதிரி சேகரிப்பு டப்பாவை விளையாட்டு வீரர் தேர்ந்தெடுப்பார்.

படி 5

மாதிரியை அளித்தல்

விளையாட்டு வீரர் மாதிரியை வழங்கத் தயாரானதும், சிறுநீர் மாதிரியை அவர் அளிக்கும்போது டிசிஒ அல்லது பாதுகாவலர் சாட்சியாக இருப்பார்.

படி 6

சிறுநீரின் அளவு

சிறுநீர் மாதிரிகளுக்கு குறைந்தபட்சம் 90 மிலி தேவைப்படுகிறது. முதல் மாதிரி 90 மிலி இல்லை என்றால், காத்திருந்து கூடுதல் மாதிரியைக் கொடுக்கும்படி விளையாட்டு வீரர் கேட்டுக்கொள்ளப்படலாம்.



படி 7
மாதிரிகளை பிரித்தல்
விளையாட்டு வீரர் தன் சிறுநீரை ஏ மற்றும் பி பாட்டில்களாகப் பிரிப்பார். சேகரிப்பு டப்பாவில் மீதமுள்ள சிறுநீர் இருக்கும். விளையாட்டு வீரரின் ஏ மாதிரி, பாதகமான பகுப்பாய்வு முடிவுகளுடன் ("நேர்மறை" முடிவுகள்) திரும்பி வந்தால், இரண்டாவது பகுப்பாய்வு செய்வதற்கான வாய்ப்பை பி மாதிரி வழங்குகிறது.

படி 8
மாதிரியை சீல் செய்தல்
ஏ மற்றும் பி பாட்டில்கள் விளையாட்டு வீரரால் சீல் வைக்கப்படும்.

படி 9
நீர்த்தல் தன்மை அளவீடு
ஆய்வகத் தரங்களுக்கு ஏற்றபடி உள்ளதா என்பதைத் தீர்மானிக்க டிசிஒ விளையாட்டு வீரரின் சிறுநீரின் நீர்ப்புத்தன்மையை அளவிடுவார்.. மாதிரி மிகவும் நீர்த்ததாக இருந்தால் வீரர் கூடுதல் மாதிரி(களை) வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்.

படி 10
ஊக்கமருந்து கட்டுப்பாட்டு படிவத்தை (டிசிஎஃப்) நிரப்புதல்
விளையாட்டு வீரர் டிசிஎஃப் ஐ, காகிதம் அல்லது டிஜிட்டல் வடிவத்தில் டிசிஒ விடம் நிரப்புவார். தனிப்பட்ட தகவல், பயன்படுத்தப்படும் பொருட்கள், விதிமுறைகளின் பட்டியல் மற்றும் ஊக்கமருந்து கட்டுப்பாட்டு செயல்முறை தொடர்பாக ஏதேனும் கருத்துகளை வழங்குமாறு விளையாட்டு வீரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். டிசிஎஃப்பின் அச்சடிக்கப்பட்ட அல்லது டிஜிட்டல் நகலை விளையாட்டு வீரர் பெறுவார்.

படி 11
மாதிரி ஆய்வகத்திற்கு அனுப்பப்படும்
விளையாட்டு வீரரின் சீல் செய்யப்பட்ட மாதிரி, பாதுகாக்கப்பட்டு வாடா அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது. மாதிரியுடன் வரும் டிசிஎஃப் ஆய்வக நகல் ரகசியமாக வைக்கப்படும். இதில் மாதிரியின் பாட்டில் எண், விளையாட்டின் பெயர் மற்றும் விளையாட்டு வீரரின் பாலினம் ஆகியவை மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும்.



பரிசோதனை (ரத்தம்)

பரிசோதனை செயல்பாட்டில் 9 படிகள் அடங்கும்:

படி 1

விளையாட்டு வீரர் தேர்வு

விளையாட்டு வீரர்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பரிசோதனைக்கு தேர்ந்தெடுக்கப்படலாம்.

படி 2

அறிவிக்கை

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரி (டிசிஒ) அல்லது பாதுகாவலர் விளையாட்டு வீரரிடம், ஊக்கமருந்து கட்டுப்பாட்டு செயல்முறைக்கு (பரிசோதனை)அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். மேலும் அவர் எந்த ஏடிஒ அதிகார அமைப்பின் கீழ் பரிசோதிக்கப்படுகிறார் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

படி 3

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சென்று சேருதல்

விளையாட்டு வீரர் உடனடியாக ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு செல்ல வேண்டும் (ஒருமுறை சென்று சேர்ந்த பிறகு அவருக்கு பதக்க விழா போன்றவற்றுக்காக விலக்கு அளிக்கப்படலாம்).

படி 4

மாதிரி சேகரிப்பு கிட்டின் தேர்வு

ஊக்கமருந்து கட்டுப்பாட்டு பணியாளர்கள் வழங்கியவற்றில் இருந்து ரத்த மாதிரி சேகரிப்பு கிட்டை விளையாட்டு வீரர் தேர்ந்தெடுப்பார்.

படி 5

மாதிரியை அளித்தல்

வெனின் பஞ்சருக்கு முன் குறைந்தது 10 நிமிடங்களாவது உட்கார்ந்து ஓய்வெடுக்கும்படி விளையாட்டு வீரரிடம் சொல்லப்படும்.

ரத்த சேகரிப்பு அதிகாரி (பிசிஒ) விளையாட்டு வீரரின் அதிகம் பயன்படுத்தாத கையை நீட்டச்சொல்வார். மேல் கையில் டர்னிக்கேட்டை கட்டுவார். ஊசி குத்தவேண்டிய இடத்தில் சருமத்தை சுத்தம் செய்வார். பிசிஒ விளையாட்டு வீரரிடமிருந்து ரத்தத்தை எடுப்பார் மற்றும், ஒவ்வொரு வேக்யூடேனர் ரத்தக் குழாயிலும் தேவையான அளவு ரத்தத்தை சேகரிப்பார்.



உலர்ந்த ரத்தப் புள்ளிப் பகுப்பாய்விற்கு: டிசிஒ/பிசிஒ குத்துவதற்கு மிகவும் பொருத்தமான இடத்தை மதிப்பிடுவார். இது விளையாட்டு வீரர் அல்லது அவரின் விளையாட்டு செயல்திறனை பாதிக்க வாய்ப்பில்லாத இடமாக இருக்கவேண்டும்.
விளையாட்டு வீரர், மாதிரி சேகரிப்பு இடத்தை தேய்த்து சூடுபடுத்துவார். டிசிஒ/பிசிஒ ரத்த மாதிரி எடுக்கும் இடத்தை ஸ்டெரைல் டிஸின்ஃபெக்டண்ட் பேட் அல்லது ஸ்வாபால் கிருமி நீக்கம் செய்வார்.
டிசிஒ/பிசிஒ விரல் நுனி அல்லது மேல் கையில் இருந்து ரத்தத்தை சேகரிப்பார்.

படி 6
மாதிரியை பிரித்தல்

பிசிஒ, ஏ மற்றும் பி கிட்களில் வேக்யூடேனர் குழாய்களை வைப்பார். (ஏபிபி திட்டத்தின் ஒரு பகுதியாக ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டால், ஒரே ஒரு குப்பி மட்டுமே தேவைப்படலாம்).

உலர்ந்த ரத்தப் புள்ளிப் பகுப்பாய்விற்கு: டிசிஒ/பிசிஒ, டிபிஎஸ் மாதிரிகளை ஏ மற்றும் பி என பெயரிடப்பட்ட பாதுகாப்பான கிட்டுக்கு மாற்றுவார்.

படி 7
மாதிரிகளை சீல் செய்தல்

விளையாட்டு வீரர் ஏ மற்றும் பி பாட்டில்களை சீல் வைப்பார்.

படி 8
ஊக்கமருந்து கட்டுப்பாட்டு படிவத்தை (டிசிஎஃப்) நிரப்புதல்

விளையாட்டு வீரர் டிசிஎஃப் ஐ, காகிதம் அல்லது டிஜிட்டல் வடிவத்தில் டிசிஒ விடம் நிரப்புவார். தனிப்பட்ட தகவல், பயன்படுத்தப்படும் பொருட்கள், விதிமுறைகளின் பட்டியல் மற்றும் ஊக்கமருந்து கட்டுப்பாட்டு செயல்முறை தொடர்பாக ஏதேனும் கருத்துகளை வழங்குமாறு விளையாட்டு வீரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். டிசிஎஃப்பின் அச்சடிக்கப்பட்ட அல்லது டிஜிட்டல் நகலை விளையாட்டு வீரர் பெறுவார்

படி 9
மாதிரி ஆய்வகத்திற்கு அனுப்பப்படும்

விளையாட்டு வீரரின் சீல் செய்யப்பட்ட மாதிரி, பாதுகாக்கப்பட்டு வாடா அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது. மாதிரியுடன் வரும் டிசிஎஃப் ஆய்வக நகல் ரகசியமாக வைக்கப்படும். இதில் மாதிரியின் பாட்டில் எண், விளையாட்டின் பெயர் மற்றும் விளையாட்டு வீரரின் பாலினம் ஆகியவை மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும்.



தாமத கோரிக்கை

ஒரு விளையாட்டு வீரர் ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு உடனடியாக செல்ல முடியாமல் தாமதம் ஏற்பட பல காரணங்கள் இருக்கலாம். பின்வரும் அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காக தாமத கோரிக்கை விடுக்க விளையாட்டு வீரர்களுக்கு உரிமை உண்டு. தாமதத்திற்கான அனுமதி என்பது ஊக்கமருந்து கட்டுப்பாட்டுப் பணியாளர் எடுக்கும் முடிவாகும். அது உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

போட்டியின் போது விளையாட்டு வீரர் பின்வரும் காரணங்களுக்காக தாமத கோரிக்கை விடுக்கமுடியும்:

•பதக்க விழாவில் பங்கேற்பது

•ஊடகதிற்கான உறுதிமொழிகளை நிறைவேற்றுதல்

•மேலும் போட்டியில் பங்கேற்பது

•வார்ம்-டவுன்

•மருத்துவ சிகிச்சை பெறுதல்

•மொழிபெயர்ப்பாளரை தேடுதல்

•நியாயமான மற்றும் ஆவணப்படுத்தப்படும் வேறு ஏதேனும் அசாதாரண சூழ்நிலைகள்

போட்டிக்கு வெளியே விளையாட்டு வீரர் பின்வரும் காரணங்களுக்காக தாமத கோரிக்கை விடுக்கமுடியும்:

•பதக்க விழாவில் பங்கேற்பது

•ஊடகதிற்கான உறுதிமொழிகளை நிறைவேற்றுதல்


•மேலும் போட்டியில் பங்கேற்பது

•வார்ம்-டவுன்

•மருத்துவ சிகிச்சை பெறுதல்

•மொழிபெயர்ப்பாளரை தேடுதல்

•நியாயமான மற்றும் ஆவணப்படுத்தப்படும் வேறு ஏதேனும் அசாதாரண சூழ்நிலைகள்



மைனர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான மாற்றங்கள்

மைனர்களை பரிசோதிக்கும் போது செயல்முறையில் முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு: இது பற்றி விளையாட்டு வீரர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்

•மைனர்களிடம், ஊக்கமருந்து கட்டுப்பாட்டுப் பணியாளர் (டிசிபி) மூலம் விளையாட்டு வீரரின் பிரதிநிதி (அவர் மைனராக இருக்கக்கூடாது) முன்னிலையில் பரிசோதனை பற்றி அறிவிக்கப்பட வேண்டும். தேசிய நிர்வாக குழு உறுப்பினர், பயிற்சியாளர் அல்லது பெற்றோர், பிரதிநிதியாக இருக்கலாம். இந்த பிரதிநிதியை மைனர் நிராகரித்துவிட்டால், மற்றொரு டிசிபி போன்ற வேறொரு வயது வந்தவர் இருப்பதை டிசிபி உறுதிசெய்வார். பெரியவர்கள் யாரும் இல்லை என்றால், வயது வந்தவர் கிடைக்கும் வரை அறிவிக்கை நிறுத்தப்படும்.
•பரிசோதனை பற்றி தெரிவிக்கப்பட்டால் மைனர்கள் தங்களுடன் ஒரு பிரதிநிதியை அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த பிரதிநிதி, அறிவிப்பின் போது இருக்கும் அதே வயது வந்தவராகவோ அல்லது வேறு நபராகவோ இருக்கலாம். டிசிபி மற்றும் வயது வந்த ஒருவரின் மேற்பார்வையில் விளையாட்டு வீரர் பிரதிநிதியை கண்டறியலாம்.
•டிசிபி அறிவிக்கைக்கு பிறகு எந்த நேரத்திலும் டிசிபி, தனியாக இருக்கும் மைனருடன் விடப்படமாட்டார்.
•ஒரு விளையாட்டு வீரர் மாதிரியை வழங்கத் தயாராக இருக்கும்போது, மாதிரி வழங்கலை கண்காணிக்கும் டிசிபியுடன் எப்போதும் ஒரு பார்வையாளர் இருக்கவேண்டும். அவர்களையும், அவர்களது நடத்தையையும் பார்வையாளர் கண்காணிக்க வேண்டும். வீரரின் பிரதிநிதியும் அங்கே இருந்தால் அவரும் டிசிபி யுடன் இருப்பார். மேலும் மாதிரியைக் கொடுக்கும் வீரரை கண்காணிக்கும் டிசிபியின் மீது அவர் பார்வை வைத்திருப்பார். விளையாட்டு வீரர் சாப்பிள் கொடுக்கும்போது டிசிபி மட்டுமே அவரை நேரடியாக பார்க்க முடியும். விளையாட்டு வீரர் கோரிக்கை விடுக்காதவரை, இரண்டாவது பார்வையாளரோ அல்லது விளையாட்டு வீரரின் பிரதிநிதியோ வீரர் சிறுநீர் கழிப்பதை நேரடியாகப் பார்க்கக் கூடாது.

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களை பரிசோதிக்கும் போது, செயல்முறையில் செய்யப்படும் முக்கிய மாற்றங்கள் இவை பற்றி விளையாட்டு வீரர்களுக்கு தெரிந்திருக்கவேண்டும்:

•உடல் ஊனம், மட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் அல்லது கைகால் அசைவைக் கொண்ட விளையாட்டு வீரர்கள், மாதிரி சேகரிப்பு உபகரணங்களைக் கையாளும் போது, மாதிரியைப் பிரிக்கும் போது அல்லது டிசிஎஃப் ஐ பூர்த்தி செய்யும் போது, வயது வந்த பிரதிநிதி அல்லது டிசிஒ விடம் உதவி கேட்கலாம். வீரரால் செய்ய முடியாவிட்டால் பிரதிநிதி டிசிஎஃப் இன் தேவையான பிரிவுகளை நிரப்பி வீரரின் சார்பாக படிவத்தில் கையொப்பமிடலாம்.



விளையாட்டு வீரர் பயலாஜிக்கல் பாஸ்போர்ட்(ஏபிபி) திட்டம் என்றால் என்ன?

•ஏபிபி திட்டத்திற்கு பின்னால் உள்ள கொள்கையானது, காலப்போக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயிரியல் குறிப்பான்களை (உயிரியல் அளவுருக்கள்) கண்காணிப்பதாகும். இது உடலில் டோப்களின் விளைவுகளை மறைமுகமாக வெளிப்படுத்தும்.

• வீரரின் முந்தைய மாதிரிகளிலிருந்து தரவைப் பயன்படுத்தும் புள்ளிவிவரக் கருவிகளின் அடிப்படையில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கான நீண்ட சுயவிவரங்கள், எதிர்கால மாதிரிகளுக்கான தனிப்பட்ட வரம்புகள் அல்லது குறிப்பு வரம்புகளை மதிப்பிடுவதற்காக, உருவாக்கப்படுகின்றன.

• மாதிரியிலிருந்து கிடைக்கும் ஏதேனும் தரவு, விளையாட்டு வீரரின் குறிப்பு வரம்பிற்கு வெளியே இருந்தால், இந்த அசாதாரண மதிப்பு, ஊக்கமருந்து அல்லது மருத்துவ நிலையைக் குறிக்கலாம்.

•தற்போது ஏடிபி திட்டத்தில் மூன்று தொகுதிகள் செயல்படுத்தப்படுகின்றன: அவை ஹீமட்டாலஜிக்கல், ஸ்டெராய்டல் மற்றும் எண்டோகிரைன் தொகுதிகள்.


ஏடிபி திட்டத்தின் நோக்கங்கள்

•அசாதாரண சுயவிவரங்களைக் கொண்ட விளையாட்டு வீரர்களை இலக்காகக்கொண்டசோதனையில், வழக்கமான ஊக்கமருந்து எதிர்ப்பு சோதனைக்கு கூடுதலாக இது பயன்படுத்தப்படலாம்.

• ஊக்கமருந்து தடுப்பு விதி மீறல் விவகாரத்தில் ஊக்கமருந்தை உறுதிப்படுத்தும் ஆதாரமாகவும் இது பயன்படுத்தப்படலாம்.



விளையாட்டு வீரர்கள் உயிரியல் பாஸ்போர்ட் செயல்முறை





ஏடிபி திட்டத்தின் தொகுதிகள்

1. ஹீமாட்டாலஜிக்கல் தொகுதி: ஹீமாட்டாலஜிக்கல் தொகுதி ரத்த டோப்பின் குறிப்பான்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கிறது. ஏஏஇ க்களின் பயன்பாடு மற்றும் எந்த விதமான ரத்தமேற்றுதல் அல்லது சாதகமாக பயன்படுத்தல் உட்பட ஆக்சிஜன் போக்குவரத்து அல்லது விநியோகத்தை மேம்படுத்துவதற்காக தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும்/அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளின் பயன்பாட்டை அடையாளம் காண்பதே இந்த தொகுதியின் நோக்கம்.

ஏபிபி ஹீமாடோலாஜிக்கல் தொகுதிக்குள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் ரத்த வேரியபிள்கள் பின்வருமாறு. அசாதாரண ரத்த சுயவிவர ஸ்கோர், ஹீமாடோக்ரிட், ஹீமோகுளோபின், முதிர்ச்சியடையாத ரெட்டிகுலோசைட் ப்ராக்ஷன், சராசரி கார்பஸ்குலர் ஹீமோகுளோபின், சராசரி கார்பஸ்குலர் ஹீமோகுளோபின் செறிவு, சராசரி கார்பஸ்குலர் ஹீமோகுளோபின் கொள்ளளவு, ஆஃப் ஸ்கோர், ப்ளேட்லெட் எண்ணிக்கை, சிவப்பு அணுக்கள் (எரித்ரோசைட்) எண்ணிக்கை, சிவப்பு அணு விநியோக அகலம் (நிலையான விலகல்), ரெட்டிகுலோசைட் எண்ணிக்கை, ரெட்டிகுலோசைட் சதவிகிதம், வெள்ளை ரத்த அணுக்கள்

2. ஸ்டெராய்டல் தொகுதி: ஸ்டெராய்டல் தொகுதி சிறுநீர் மற்றும்/அல்லது சீரம் மாதிரிகளில் அளவிடப்படும் ஸ்டீராய்டு டோப்பின் குறிப்பான்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கிறது. வெளியில் இருந்து நிர்வகிக்கப்படும் போது எண்டோஜெனஸ் அனபோலிக் ஆண்ட்ரோஜெனிக் ஸ்டீராய்டுகளை (EAAs) அடையாளம் காண்பதே தொகுதியின் நோக்கம்.

ஸ்டெராய்டல் தொகுதி என்பது ஒருவரின் சிறுநீரில் கலப்படம் அல்லது வேறு ஒருவரின் சிறுநீருடன் மாற்றப்பட்ட சிறுநீர் மாதிரிகளைக் கண்டறிவதற்கான ஒரு சிறந்த வழிமுறையாகும்.

3. எண்டோக்ரைன் தொகுதி: எண்டோக்ரைன் தொகுதி எச்ஜிஎச் டோப்பின் குறிப்பான்கள் பற்றிய தகவலை சேகரிக்கிறது. எச்ஜிஎச் இன் பயன்பாடு மற்றும் தடைசெய்யப்பட்ட பட்டியலின் பிரிவு S2.2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட எச்ஜிஎச் அனலாக்ஸ், துண்டுகள் மற்றும் வெளியீட்டு காரணிகளின் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வதே தொகுதியின் நோக்கமாகும்.

தடைசெய்யப்பட்ட பட்டியலின் S2.3 பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படும் இன்சுலின் போன்ற வளர்ச்சி காரணி-1 (IGF-1) இன் பயன்பாட்டையும் இந்த தொகுதி குறிப்பிடலாம்.



விளையாட்டு வீரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

விளையாட்டு வீரர்களின் உரிமைகள்:

1. ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அவர்களுடன் செல்ல அவர்கள் விரும்பும் ஒரு பிரதிநிதியை நியமிக்கலாம்.

2. மொழிபெயர்ப்பாளருக்கு கோரிக்கை விடுக்கலாம்.

3. மாதிரி சேகரிப்பு நடைமுறை பற்றிய தகவலைக் கோரலாம்.

4. செல்லுபடியாகும் காரணங்களுக்காக ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு செல்வதற்கு தாமத கோரிக்கை விடுக்கலாம் அல்லது ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரியின் ஒப்புதலுடன், பாதுகாவலரின் முழு அறிவோடு ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சென்ற பிறகும் அங்கிருந்து வெளியேறலாம்.

5. மாற்றுத்திறனாளியாக இருந்தால் மாற்றங்களைக் கோரலாம்.

6. நடைமுறை தொடர்பாக ஏதேனும் பிரச்சனை இருந்தால் அதை ஆவணப்படுத்தலாம்.

விளையாட்டு வீரர்களின் பொறுப்புகள்

1. ஊக்கமருந்து எதிர்ப்புக் கொள்கையைப் பற்றித் தெரிந்துகொண்டு பின்பற்றுவது. (எங்கு உள்ளீர்கள் என்ற துல்லியமான தகவலை வழங்குவது உட்பட).

2. மாதிரி சேகரிப்பு நடைமுறைக்கு தயார்நிலையில் இருப்பது மற்றும் பின்பற்றுவது.

3. மாதிரி சேகரிப்பு நடைமுறை முடியும் வரை முழு நேரமும் அதிகாரியின் பார்வையில் இருப்பது.

4. ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்திற்கு கூடிய விரைவில் அல்லது 60 நிமிடங்களுக்குள் செல்வது.

5. உபகரணங்களை கையாளுதல், சுயமான மாதிரி சேகரிப்பு மற்றும் பிரித்தல், சீல் செய்தல் மற்றும் பாதுகாப்பாக வைப்பது.


6. எல்லா ஆவணங்களையும் சரியாக நிரப்பி அதில் கையொப்பமிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது.

7. தடை செய்யப்பட்ட பொருட்கள் பற்றி எச்சரிக்கையாக இருப்பது.



தடை செய்யப்பட்ட மருந்துகள் காரணமாக உங்கள் விளையாட்டு வாழ்க்கையை சீரழிக்காதீர்கள்.

ஒரு மருந்து அல்லது அதன் மூலப்பொருளின் தடை செய்யப்பட்ட நிலையை எளிதாக சரிபார்ப்பதன் மூலம், தற்செயலான ஊக்கமருந்து உட்கொள்ளலில் இருந்து விளையாட்டு வீரர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.



நோ யுவர் மெடிசின் ஆப்

க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும் பதிவிறக்கவும்

எங்களுடன் இணையுங்கள்:

குறிப்பு: முரண்பாடு இருக்கும் பட்சத்தில் ஆங்கிலப் பதிப்பே ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்புகள்

குறிப்புகள்

#SAYNO TODOPING | TODAY & EVERYDAY

निष्पक्ष खेल
Play fair

தேசிய ஊக்கமருந்து தடுப்பு கழகம்

ஹால் எண். 103-104, முதல் தளம்,
ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம், புது தில்லி-110003
தொலைபேசி: 91-11-24368274, 011-24368248, 1800 11 9919
மின்னஞ்சல்: info.nada@nic-in

லாக் ஆன் செய்யவும் nadaindia.yas.gov.in

